செ.வெ.எண்:-1035 நாள்:- 23.11.2010

**செய்திக் குறிப்பு**

கனிமங்களை கள்ளத்தனமாக வெட்டியெடுத்து அவற்றை கடத்துதலை தடுக்க வேண்டியதன் அவசியத்தினை கருதி தமிழகத்தில் முதல் முறையாக ஹோலோகிராம் முறை புவியியல் மற்றும் சுரங்கத்துறையினால் அறிமுகப்படுத்தப்படுகிறது. இம்முறை மூலம் சுரங்கங்களிலிருந்து கனிமங்களை வெளியே எடுத்துச் செல்வதற்கு வழங்கப்படும் இசைவாணைச்சீட்டு (permit) மற்றும் நடைசீட்டுகளில் ஹோலோகிராம் ஒட்டி வழங்கப்படும். இதன்மூலம் இசைவாணைச்சீட்டுகளை கள்ளத்தனமாக பலமுறை பயன்படுத்துதல் தடுக்க இயலும். இம்முறையை செயல்படுத்துவதன் மூலம் அரசுக்கு கிடைக்கவேண்டிய கனிம வருவாய் கிடைப்பது சாத்தியமாகும். இதன் தொடர்ச்சியாக கனிம நிர்வாகத்தில் பார்கோடிங் மற்றும் இ–பர்மிட் முறையில் இசைவாணைச்சீட்டு மற்றும் நடைச்சீட்டு வழங்குதலும் அரசால் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

24/11/10
ஆணையர் (பொ)
புவியியல் மற்றும் சுரங்கத்துறை

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,